## நொச்சியாகம பிரதேச சபை
## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நொச்சியாகம பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நொச்சியாகம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் 14 நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,360,877 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கையளித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத 24 காணிக்கூறுகளின் ரூபா 2,018,693 பெறுமதியானது கணக்கு வைக்கப்பட்டிராததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 மயான நிலையங்களின் உரித்தை சபை கையேற்றிருந்த போதும் அவற்றின் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே ரூபா 127,609 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 38,977,806 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,430,562 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 929,472 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சியத்திற்குப் பொதுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,768 | 901 | 3,275 |
| (ii) | வாடகை | 4,931 | 398 | 4,891 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,310 | 2,628 | 168 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,306 | 5,853 | - |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 925,171 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 465,140 |

**2.3.3 ஏக்கர் வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(3) ஆம் பிரிவின் பிரகாரம் சபை எல்லைக்குள் அமைந்துள்ள காணியின் அடிப்படையில் ஏக்கர் வரி விதித்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்**

பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 814,000 பெறுமதியான அரிசிமாவை அண்மித்த பேக்கரி உற்பத்தித் தொகுதிகள் மற்றும் அதற்கான கட்டிட நிர்மாணம் மற்றும் ஏனைய பொதுச் செயற்பாட்டுச் செலவினமாக ரூபா 1,750,,836 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபைக்குச் சொந்தமான பழைய கட்டிடம் முறையான வாடகை உடன்படிக்கையின்றி அரசாங்கத் திணைக்களத்திற்கு பல வருடங்களுக்கு முன்னிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித வாடகையும் பெறப்படாதிருந்த போதும் 05 வருடங்களுக்கான மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 125,464 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சமய நடவடிக்கைகளுக்காகச் செய்யப்பட்ட ரூபா 50,000 தொகையான செலவினங்களுக்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.7 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

ரூபா 1,224,300 கூட்டுத்தொகையான கடை வாடகை செலுத்தாமை தொடர்பாக 04 வாடகையாளர்களுக்கு எதிராக சபையினால் அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த கடைகளின் உரித்து தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக சட்டச் செயற்பாடுகளுக்கு சமூகமளிப்பதைத் தவிர்ப்பதற்கு சபை தீர்மானம் எடுத்திருந்தது.

**2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக பாதீடு முறையாகத் தயாரிக்கப்படாமையினால் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே போதுமானளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 35 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளளிக்கப்படாத சம்பளமாக ரூபா 3,887,673 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடுவதற்கிருந்த ஊழியர் கடன் மீதியான ரூபா 1,008,400 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 21,909,477 இனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட 05 அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 232,070 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு கிடைத்திருந்த போதிலும் அந்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபையின் மூலம் அமுல்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 485,000 கிரயமான 03 வேலைகள் கைவிடப்பட்டிருந்தது.

**2.9 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் போது சபையினால் சுற்றாடலைப் பேணும் கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) மனிதவள முகாமைத்துவம்